அலகு 3

# மழை



நீரின்றி இவ்வுலகம் இயங்காதல்லவா! வானிலிருந்து பெய்யும் மழை காணக் காணத் தெவிட்டா அழகு. மழையில் விளையாட விருப்பமில்லா குழந்தைகள் உண்டா? அவர்களது உற்ற விளையாட்டுத் தோழனாகிய மழையே மூன்றாம் அலகின் மையக்கருத்து.

மழைக் காட்சிகளும் நீரின் பயன்களும் பற்றிய கருத்துருவாகும் வண்ணம் இவ்வலகும் செயல்பாடுகளும் பின்னப்பட்டுள்ளன.

6, 7, 8, 9 எண்களைக் கலைவாணனின் கனவுமாகத் தொடர்படுத்திக் கதையாகப் பாடப்பகுதியில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொன்றாக இவ்வெண்களை அறிமுகப் படுத்தவேண்டும். 1 முதல் 5 வரையிலுள்ள எண்களை ஒரு குழுவின் எண்ணிக் கையாக அறிமுகப்படுத்தினோம். அதேபோல் 6 எண்ணிக்கையுள்ள ஒரு குழுவின் பெயரே 6 என்ற முறையில் இங்கே அறிமுகம் செய்ய வேண்டாம். 5 + 1 = 6 என்ற முறையில் இங்கு அறிமுகம் செய்ய வேண்டாம். இதைப் பின்னர் பார்க்கலாம்.

**இப்பாடத்தின் வாயிலாக அறிமுகமாகும்...**

| | | |
|---|---|---|
| **சொற்கள்** | : | **இடி, மழை, தவளை, மின்னல், சன்னல், ஈரம், செடி** |
| **உயிரெழுத்துகள்** | : | **இ, ஈ** |
| **மெய்யெழுத்து** | : | **ன், ள், ர், ச்** |
| **உயிர் மெய் எழுத்துகள்** | : | **ன, ள, ர, ச** |
| **ஒலித் துணைக் குறியீடுகள்** | : | **ெ** |

பாடவலைச்சட்டம்

அலகு 3 மழை (தமிழ்)

| கருத்துகள் | மொழி வெளியீட்டு வடிவங்கள் எழுத்துகள் / மொழிக்கூறுகள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ கலந்துரையாடலில் பங்கேற்பதன் மூலம் தனது அனுபவத்தை வெளியிட இயலும். | கலந்துரையாடல் | ❖ கலந்துரையாடல் வாயிலாக தனது அனுபவத்தைக் கூறுகிறார்கள். |
| ❖ குழுவாகப் பாடும் போது பாடலின் இனிமை கூடுகிறது. | பாடுதல் | ❖ குழுவாகவும், தனியாகவும் பாடலை பாடுகிறார்கள். |
| ❖ ஒரே பாடலை பல்வேறு மெட்டுக்களில் பாட இயலும். | மெட்டமைத்தல் | ❖ பல்வேறு மெட்டமைத்துப் பாடுகிறார்கள்.. |
| ❖ கற்ற எழுத்துகளோடு இணைந்து வரும் புதிய எழுத்துகளை உச்சரிப்பின் அடிப்படையில் இனம் காணலாம். | சொற்களை வட்டமிடுதல் (இடி, மின்னல், செடி, தவளை, ஈரம்) | ❖ கற்ற எழுத்துக்களோடு இணைந்து வரும் புதிய எழுத்துகளை இனம் காண்கிறார்கள்.. |
| ❖ கற்ற எழுத்துகளை தகுந்த முறையில் இணைத்துப் புதிய சொற்களை உருவாக்க இயலும். | புதிய சொற்கள் (ஈட்டி, இலை,) | ❖ கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி புதிய சொற்களை உருவாக்குகிறார்கள். |
| ❖ படங்களின் அடிப்படையில் கதையின் முடிவினை ஊகித்துச் சொல்லலாம். | கதை | ❖ கதை கூறுகிறார்கள். |
| ❖ மொழி விளையாட்டுகளில் ஈடுபடுவது இன்பம் தரும் செயலாகும். | விடுகதை | ❖ விடுகதை விளையாட்டுகளில் ஈடுபடுகிறான். விடைகளைக் கண்டுபிடித்துக் கூறுகிறார்கள். |

| | | |
|---|---|---|
| ❖ தகுந்த வண்ணங்கள் தீட்டும் போது படங்கள் அழகாகத் தோன்றும். | படம் வரைதல் | ❖ படம் வரைந்து வண்ணம் தீட்டுகிறார்கள். |
| ❖ கற்ற எழுத்துக்கள் வரும் புதிய சொற்கள் அடங்கிய வாக்கியங்களை வாசிக்க இயலும். | வாசிப்பு | ❖ கற்ற எழுத்துக்களைப் பயன்படுத்தி உருவாக்கிய வாசிப்பு பகுதியை சரளமாக வாசிக்கிறார்கள். |

**சூழ்நிலையியல்**

| கருத்துகள் | செயல்திறன்கள் | முதன்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ மழை பெய்வதற்கு முன் ஆகாயத்தில் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. | கலந்துரையாடல் | ❖ மழை பெய்வதற்கு முன் ஆகாயத்தில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பான கலந்துரையாடலில் பங்கேற்கிறார்கள். |
| ❖ மழை பெய்யும் போது சுற்றுச்சூழலில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின்றன. | கலந்துரையாடல், உற்றுக்கவனித்தல் | ❖ மழை பெய்யும்போது சுற்றுச்சூழலில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறார்கள்.. (இடி, மின்னல், காற்று) |
| ❖ மழைக் காலத்திற்கும் வெயில் காலத்திற்கும் பல வேறுபாடுகள் உள்ளன. | படங்களை உற்றுக்கவனித்தல், கலந்துரையாடல். | ❖ கலந்துரையாடலில் பங்கேற்று கருத்துக்களை வெளியிடுகிறார்கள். |
| ❖ சுற்றுப்புறத்தை உற்றுநோக்கி மழைக் காலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூற இயலும். | கலந்துரையாடல், உற்றுக்கவனித்தல் | ❖ படங்கள், சுற்றுப்புறத்தை உற்றுநோக்கி மழைகாலத்தில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறார்கள். (செடி முளைத்தல், செடிகளின் பசுமை, மண்) |
| ❖ மழைக் காலத்தில் நீர் நிலைகள் நிரம்பி வழிகின்றன. | கலந்துரையாடல், உற்றுக்கவனித்தல் | ❖ கலந்துரையாடல் வாயிலாக மழை காலங்களில் நீர் நிலைகளில் ஏற்படும் மாற்றங்களைக் கூறுகிறார்கள். |

**கணிதம்**

| கருத்துகள் | செயல்திறன்கள் | முதந்மைக் கற்றல் அடைவுகள் |
|---|---|---|
| ❖ குழுவில் எத்தனை உண்டு என்றறிய எண்ணிப்பார்க்க வேண்டும். | விளையாட்டு, கலந்துரையாடல் வாயிலாகவும் நடைமுறைச் சூழலில் பங்கேற்று குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள பொருட்களை எண்ணி எடுக்கின்றனர். | ❖ குழுவிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையிலுள்ள பொருட்களை எண்ணி எடுக்கின்றனர். (1 முதல் 9 வரை) |
| ❖ ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது என்பதை 6, 7, 8, 9 என்ற எண்ணுரு பயன்படுத்தி எழு தலாம். | கதை, விளையாட்டு வாயிலாக நடைமுறைப் பிரச்சனைகளைப் பற்றிக் கலந்துரையாடியும் 6 முதல் 9 வரையிலான எண்களை எழுதவும் வாசிக்கவும் செய்கின்றனர். | ❖ 6 முதல் 9 வரையிலான எண்ணுருக்களை எழுதவும் வாசிக்கவும் செய்கின்றனர். |
| ❖ எண்களை பெரியது, சிறியது என்று வரிசைப்படுத்த முடியும். | நடைமுறைச் சூழலில் பங்கெடுத்து 1 முதல் 9 வரையிலான எண்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். | ❖ 1 முதல் 9 வரையிலான எண்களை ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். |

அலகு - 3

# மழை

**கதைக்களம்**

**நிகழ்வு 1**

*கதையோட்டம்*

ஒரு குளத்தில் ஆமையும் தவளையும் வசித்து வந்தன. அவை இரண்டும் நெருங்கிய நண்பர்கள். குளத்து நீரில் துள்ளிக்குதித்து விளையாடிப் பொழுதைக் கழித்தன. ஆனால் குளத்தில் நாளுக்குநாள் நீர் குறைந்து கொண்டே வந்தது. குறைவான தண்ணீரில் விளையாடுவது சிரமமாக இருந்தது. குளம் வற்றிவிடுமோ என அவை பயந்தன. எப்போது மழை வருமென்று அவை ஆவலோடு காத்திருந்தன. அப்போது ஒருநாள்...

*பாடப்பகுதி*

வானில் மேகம் திரண்டது. வாடைக்காற்றும் வீசியது. மின்னல் மின்னி மறைந்தது. இடியின் சப்தம் காதைப் பிளந்தது. இருட்டு எங்கும் படர்ந்தது. மழைவருவதற்கான அடையாளங்கள் தென்பட்டன. குளத்தில் மீன்கள் துள்ளிச்சாடின. மான்கள் துள்ளி ஓடின. மரம் செடிகள் ஆடின. மழை பெய்யத் தொடங்கியது. ஆமையும் தவளையும் மழையில் நனைந்தபடியே பாடி மகிழ்ந்தன.

**நிகழ்வு 2**

*கதையோட்டம்*

அடைமழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. சூரியன் மேகங்களுக்கு இடையே மறைந்து கொண்டது. ஊளையிடும் காற்றில் மரங்கள் தலைவிரித்து ஆடின. குளிரால் ஆமையும் தவளையும் நடுங்கின. பறவைகள் இரை தேட இயலாமல் மரத்திலேயே அடைந்து கிடந்தன. பசுமையான செடிகளும் புற்களும் வளரத்தொடங்கின ஒரு வழியாக ...

*பாடப்பகுதி*

குளம் நிறையத் தொடங்கியது. குளத்தில் தாமரைக் கொடி படர்ந்து வளர்ந்தது. தாமரை இலைகள் தண்ணீரில் மிதந்தன. தாமரைக் கொடிகளில் மொட்டுகள் மெல்லத் தலை தூக்கின. சில மொட்டுகள் மலர்ந்து தாமரைப் பூக்கள் சிரித்தன. மழை ஒரு வழியாக ஓய்ந்தது. தவளை மகிழ்ந்தது. தவளையும் ஆமையும் தாமரைப்பூவைப் பறித்து விளையாடின. நண்டும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது. விளையாட்டு தொடர்ந்தது.

நிகழ்வு 3

கதையோட்டம்

"குளத்தில் விளையாடியது போதும் வாருங்கள் கரைக்குச் செல்லலாம்" ஆமை அழைத்தது. தவளையும் நண்டும் சம்மதித்தன..... குளக்கரையில் வரிசையாக மரங்கள் நின்றிருந்தன. சில மரங்களில் பூக்கள் பூத்துக்குலுங்கின. நெல்லி மரத்தில் ஏராளம் நெல்லிக்காய்கள் காய்த்துக் தொங்கின. சில கீழே விழுந்து சிதறிக்கிடந்தன. "நெல்லிக்காய் பொறுக்கி விளையாடலாம்" ஆமை அழைத்தது. அவை மூன்றும் நெல்லிக்காய்களைப் பொறுக்கத் தொடங்கின. "ஐயோ அங்கே பாருங்கள் ஒரு சிறுவன் படுத்துக்கிடக்கிறான்". தவளை அலறியது. மூன்றும் சிறுவன் அருகே சென்றன; ஒரு மரத்திற்குப் பின்னால் ஒளிந்து கொண்டன.

பாடப்பகுதி

நண்பர்கள் வருவதற்கு முன்பே குளக்கரைக்கு வந்த கலைவாணன் மரத்தடியில் படுத்து உறங்கி விட்டான். உறக்கத்தில் பலவிதமான கனவுகள் கண்டான். அவனது நண்பர்கள் வருவதாகவும் அவர்களுடன் சேர்ந்து பாடி விளையாடுவதாகவும் அவன் கனவு கண்டு கொண்டிருந்தான். நெல்லிக்காய் மரத்தின் அடியில் விழுந்து கிடந்த நெல்லிக்காய்களைப் பொறுக்கித் தனது நண்பர்களுக்குக் கொடுப்பது போலவும் கனவு வந்தது. திடீரென்று அவனது தலையில் ஒரு நெல்லிக்காய் விழுந்தது. "ஐயோ! அம்மா!" என்று அலறியவாறு கலைவாணன் எழுந்தான். நெல்லிக்காய்களைப் பொறுக்கிக் கொண்டு வீட்டிற்குச் சென்றான்

நிகழ்வு 4

கதையோட்டம்

கலைவாணன் அலறியதைக்கண்ட ஆமையும் தவளையும் கை கொட்டிச் சிரித்தன. அவன் அங்கிருந்து சென்றுவிட்டதால் அவை மீண்டும் விளையாடத் தொடங்கின. அப்போது காற்று பலமாக வீசியது. தொபீக்! என்ற சத்தம் கேட்டு அவை திரும்பின. ஒரு பாக்கு மரத்தில் இருந்து மட்டை விழுந்து கிடந்தது. ஆஹா...! அழகான பாக்கு மட்டை! வாருங்கள் பார்க்கலாம்" தவளை அழைத்தது.

பாடப்பகுதி

"பாக்கு மட்டையில் ஏறி உட்காந்து வண்டி இழுத்து விளையாடலாம்". ஆமை சொன்னது. "வேண்டாம், இது படகு போல் உள்ளது. படகு செய்து விளையாடலாம்" ஆமை சொன்னது. அவை குளத்தில் படகு விளையாட்டு விளையாடின குளம் நிரம்பி வழிந்தது. நண்பர்கள் ஆபத்தை உணரவில்லை. கொக்கு அதைக் கவனித்தது. இந்தப் பக்கம் வராதீங்க!" அது அலறியது. ஆனால் நீரோட்டம் படகை அடித்துச் சென்றது. படகு கவிழ்ந்தது.

# நிகழ்வு - 1
# வானில் மேகம் கூடுது

## நுழைவுச் செயல்பாடுகள்

### குளம் கரை விளையாட்டு

வகுப்பறையில் ஒரு வட்டம் வரையுங்கள் குழந்தைகள் வட்டத்திற்கு வெளியே நிற்கட்டும். 'குளம்' என்று கூறும்போது வட்டத்திற்கு உள்ளேயும் 'கரை' என்று சொல்லும்போது வட்டத்திற்கு வெளியேயும் சாடட்டும். தவறான முறையில் சாடியவர்கள் விளையாட்டில் இருந்து வெளியேற்றப்படுவர். இறுதியில் ஒருவரை மட்டும் விளையாட்டில் வெற்றி பெற்றதாக அறிவிக்கலாம் அல்லவா.



### கதை சொல்வாயா?

நோக்கம் :

- பாடக்கருத்திற்குக் குழந்தைகளின் கவனத்தைத் திருப்புதல்
- ஊக வாசிப்பு
- வரிவடிவம் எழுதும் முறை அறிதல்

- ''குளத்தில் வாழும் சில உயிரினங்களை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்கிறேன்'' என்று சொல்லி மின் னட்டை செயல்பாட்டின் மூலமாகத் தவளை, ஆமை ஆகியவற்றை அறிமுகம் செய்தல்
- குழந்தைகள் ஆமை, தவளை ஆகியவற்றின் பெயர்களைக் கூறும்போது அவர்களது முன்னிலையில் பசும்பலகையில் எழுதுதல்
- ''ஆமை மற்றும் தவளை தொடர்பான கதைகளைக் கேட்டிருக்கிறீர்களா?'' என்று கேட்டுக் கலந்துரையாடுதல்.
- ஒரு சிலருக்குக் கதை சொல்ல வாய்ப்பளித்தல்.



### கதையோட்டம்

நோக்கம் :

- குழந்தைகளின் கவனத்தை ஒருமுகப்படுத்துதல்
- பாடப்பகுதியைப் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல்

"ஆமை மற்றும் தவளை தொடர்பான ஒரு கதையைக் கூறட்டுமா?" என்று கேட்டுக் கதையைக் கூறுங்கள். அப்போது ஒரு நாள் என்ன நடந்தது தெரியுமா?" என்று கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## படவாசிப்பு

நோக்கம் :

- பாடப்பகுதியில் உள்ள படத்தை உற்றுநோக்குதல்.
- படத்தில் உள்ள உயிரினங்கள் நிகழ்ச்சிகள், செயல்கள் போன்றவற்றை அடையாளம் காண வாய்ப்பளித்தல்.

- படத்தில் உள்ள உயிரினங்கள் எவை?
- ஆமை நனையாமல் இருக்க என்ன செய்கிறது?
- மான்கள் என்ன செய்கின்றன?
- கொக்கு எங்கே நிற்கிறது?
- தண்ணீரில் வாழும் உயிரினங்கள் எவை?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## பாடலை இராகத்தோடு பாடுதல்

நோக்கம் :

- இசையோடு பாடுவதைக் கேட்டு இரசித்தல்.
- கருத்தறிந்து செய்கைப் பாடலாகப் பாடுதல்.

நீங்களே ஒரு மெட்டமைத்து ஓரிருமுறைப் பாடி ஒத்திகை செய்து கொள்ளுங்கள்.

- மெட்டின் அடிப்படையில் நீங்கள் பாடக் குழந்தைகள் சேர்ந்து பாடட்டும்.
- குழுவாகப் பாடிய பின் தனியாகப் பாடுவதற்கு வாய்ப்பளிக்கலாம்.
- செய்கைப் பாடலாகப் பாடுவதற்கும், பாடலுக்கு ஏற்ப அசைவுகள் நடத்துவதற்கும் உதவலாம்.

## உங்களுக்கு பிடித்த வரி எது?

நோக்கம் :

- தனக்கு பிடித்த வரியைக் கூறுதல்.

**ஆகா ஆகா....! ஐயே ஐயே.....!.**

"நான் இப்படத்தில் தவளை உள்ளது என்று சொல்லுவேன். தவளை இருந்தால் நீங்கள் 'ஆகா ஆகா!' என்று சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் 'ஐயே ஐயே!' என்று சொல்ல வேண்டும் " என்று குழந்தைகளிடம் கூறுங்கள். பிறகு படத்தில் இருப்பதையும் இல்லாததையும் மாறி மாறி வேகமாகச் சொல்லுங்கள்.

"இப்பாடலில் உனக்குப் பிடித்த வரி எது?" என்று கேட்டுக் குழந்தைகள் கூறும் வரிகளைப் பசும்பலகையில் எழுதுங்கள். "ஏன் பிடித்தது?" என்று கேட்டு உரையாடுங்கள்.

பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவ் வரிகளைக் குழந்தைகள் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

அவ்வரி பாடநூலிலுள்ள பாடலில் எங்குள்ளது என்று காட்ட வாய்ப்பளியுங்கள் (எங்கு தொடங்கி எங்கு முடிகிறது என்று சுட்டிக்காட்டச் சொல்லுங்கள்)

## வட்டமிடுவோம் வாசிப்போம்

நோக்கம் :

- குறிப்பிட்ட கருத்தோடு தொடர்புடைய சொற்களை வட்டமிடுதல்.
- வாசித்தல்.

- மழையோடு தொடர்புடைய என்னென்ன சொற்கள் பாடலில் உள்ளன? என்று கேட்டு குழந்தைகள் கூறும் சொற்களைப் பசும்பலகையில் எழுதுங்கள்.
- பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவற்றை வாசிக்க வாய்ப்பளியுங்கள்.
- அச்சொற்கள் பாடலில் எங்குள்ளன என்று கண்டுபிடித்து வட்டமிடத் தூண்டுங்கள்.

**சில எளிய விடுகதைகள்**

பல்லிருக்கும் ஆனால் கடிக்காது. அது என்ன?

## படம் பார்த்து உரையாடுங்கள்

நோக்கம் :

- படவாசிப்பு.
- கலந்துரையாடல்.
- மழைக்கு முன்னும் பின்னும் ஏற்படும் மாற்றங்களை அறிதல்.

மழை வருவதற்கு முன்னும் மழை பெய்யும் போதும் நம்மைச் சுற்றி என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன? என்று கேட்டு கலந்துரையாடுங்கள். தொடர்ந்து பாடநூல் பக்கம் 42-இல் உள்ள படத்தைப் பார்க்கத் தூண்டுங்கள். குழந்தைகள் படங்களை உற்றுக்கவனித்து மழை வருவதற்கு முன்னும் மழை பெய்யும் போதும் ஏற்படும் மாற்றங்களைக் கூற வாய்ப்பளியுங்கள்.

பாடப் பகுதியிலுள்ள வினாக்களைக் கேளுங்கள். கீழ்க்கண்ட வாறு பட்டியலிடுங்கள்.

## படம் பார்த்து எழுதுங்கள்

நோக்கம் :

☸ வாக்கியத்தை முழுமைப்படுத்துதல்

**மழைக்கு முன்**

நீல வானம்
பறவைகள் பறக்கின்றன
வானில் சூரியன் உள்ளது
பட்டம் விடும் பையன்

1. உங்கள் ஊரில் எப்பொழுது மழைபெய்தது? என்று கேட்டுக் குழந்தைகள் பதிலளித்த பின், அப்போது

- உங்கள் தெருவில் பெய்ததா?
- உங்கள் ஊர்க்கோடியில் இருக்கும் மலையில் பெய்ததா?
- உங்கள் வீட்டில் பெய்ததா?
- உங்கள் ஊர்க் குளத்தில் பெய்ததா?
- அக்குளத்தில் நிற்கும் மரத்தில் பெய்ததா?
- அம்மரத்தில் இருக்கும் இலையில் பெய்ததா?
- அங்குள்ள செடியில் பெய்ததா?
- செடியில் இருக்கும் இலையில் பெய்ததா?
- செடியில் இருக்கும் பூவில் பெய்ததா?
- செடியில் இருக்கும் காயில் பெய்ததா?

என்று தொடர்ந்து கேட்டு,

- எங்கள் தெருவில் மழை பெய்தது
- எங்கள் ஊர்க் குளத்தில் மழை பெய்தது
- குளத்தில் நிற்கும் மரத்தில் மழை பெய்தது
- 
- 

என்று முழு வாக்கியத்தில் பதிலளிக்கத் தூண்டுங்கள்.

2. குழந்தைகள் கூறிய வாக்கியங்களைத் கரும்பலகையில் எழுதி வாசிக்க வாய்ப்பளியுங்கள். (செடி தொடர்பாக வரும் வாக்கியங்களைக் கட்டாயம் எழுதுங்கள்)

3. பாடப்பகுதியிலுள்ள **படம் பார்த்து எழுதுங்கள்.** செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்ய வாய்ப்பளியுங்கள்.

4. கீழ்க்காணும் சொல்லட்டைகளைப் பயன்படுத்தி வாக்கியங்கள் உருவாக்க வாய்ப்பளியுங்கள்.

| மலையில் | இலையில் | செடியில் |
|---|---|---|
| மழை | பெய்தது. | |

**மழை பெய்யும் போது**

இடி இடிக்கிறது
மின்னல் மின்னுகிறது
காற்று வீசுகிறது
இலை உதிர்கிறது
பறவை கூட்டில் உள்ளது
மழை பெய்கிறது
இடிச்சத்தம் கேட்டதுண்டா?
இடிச்சத்தம் கேட்டுப் பயந்தது உண்டா?
இடி இடிக்கும் போது அம்மா என்ன சொல்வார்கள்?
போன்ற கேள்விகள் கேட்டு அவரவர் கருத்தைக் கூற வாய்ப்பளிக்க வேண்டும்.

## வேறுபாடு அறிந்து எழுதுவோம்

நோக்கம் :

- கற்ற ஒலித் துணைக்குறியீடுகளை வேறு உயிர் மெய்யெழுத்துக்களில் சேர்த்து புதிய உயிர்மெய் எழுத்துகள் உருவாக்குதல்
- புதிய சொற்களை உருவாக்குதல்

| அறிமுகமாகும் ஒலித்துணைக் குறியீடு | இதுவரை கற்ற எழுத்துகள் | உருவாகும் புதிய உயிர் மெய்யெழுத்துகள் |
|---|---|---|
| ெ | ப, ம, க, த, வ, ல, ச | பெ, மெ, கெ, தெ, வெ, லெ, செ |

"நான் வரைவது என்ன?" என்று கேட்டுக் கொண்டே ஒரு செடியின் படம் வரையுங்கள். அதனருகில் குழந்தைகள் கூறும் செடியை எழுதுங்கள். அதை வாசிக்கத் தூண்டுங்கள்.

தொடர்ந்து செடியில் உள்ள **டி**-ஐ அழித்து **ல்** எழுதுங்கள். **செல்** என்று வாசிக்கிறார்களா?

'செல்' உடன் ஓர் எழுத்தைச் சேர்த்தால் ஒரு பெண் குழந்தையின் பெயர் கிடைக்கும் என்று சொல்லி **செல்வி** என்றெழுதுங்கள்.

- நாம் காலில் அணிவது எது?
- தண்ணீர் எடுக்கப் பயன்படுவது எது?
- இச்சொல்லில் தொடங்கும் பூக்களைக் கூற முடியுமா?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். கரும்பலகையில் எழுதியுள்ள,

**செடி** **செல்**
**செல்வி** **செருப்பு**
**செம்பு** **செவ்வந்தி**
**செந்தாமரை**

இச்சொற்களை வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசித்துக் காட்டுங்கள்.

இறுதியாகப் பாடப்புத்தகத்திலுள்ள செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யச் சொல்லுங்கள். முதலில் சொற்களைக் கூற வாய்ப்பளியுங்கள். பின்னர் எழுதட்டும்.

குழந்தைகள் எழுதியதை வாசிக்க வாய்ப்பளித்து சார்ட்டில் எழுதுங்கள். இவ்வாறு **ா, ெ** என்ற துணை எழுத்துக்கள் சேர்த்து எழுத ஏதுவான சொல் கிடைக்கும் பொழுதெல்லாம் இச்சார்ட்டில் சேர்த்து எழுதுங்கள். குழந்தைகள் எப்பொழுதும் பார்ப்பதற்கு ஏற்ப வகுப்பில் தொங்க விடுங்கள்.

## முதல் எழுத்தை அங்கும் இங்கும் மாற்றினால் எழுத்துகள் இடம் மாறினால்

நோக்கம் ;

| | | |
|---|---|---|
| கட்டி | காட்டி | கெட்டி |
| மட்டை | மாட்டை | மெட்டை |
| பட்டி | பாட்டி | பெட்டி |
| வடி | வாடி | வெடி |
| ------ | ------ | ----- |
| ------ | ------ | ----- |
| மட்டி | மாட்டி | மெட்டி |

☸ புதிய சொற்கள் உருவாக்குதல்

கீழ்க்காணும் எழுத்தட்டைகளைத் தயாரிக்க வேண்டும்.

ம | ழை | இ | டி

தனியாக குழுவாகச் செய்வதற்கு ஏற்ற எண்ணிக்கையில் எழுத்தட்டை இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

“நான் தொடங்கலாம் என்று கூறிய பின்னரே அட்டைகளைத் திருப்ப வேண்டும். அதிலுள்ள எழுத்துகளைப் பயன்படுத்தி இயன்றளவு சொல் உருவாக்க வேண்டும். நீங்கள் உருவாக்கும் சொல்லை எழுதிக் கொள்ள வேண்டும். யார் / எந்தக் குழு முதலில் அதிகமான சொல்லை உருவாக்குகிறதோ அவருக்கு / அந்தக் குழுவிற்கே வெற்றி” என்று குறிப்புகள் கொடுத்து குழந்தைகள் சொல்லுருவாக்கத் தூண்டுங்கள்.

போட்டி முடிந்தபின் குழந்தைகள் உருவாக்கிய சொல்லை அவர்கள் கூறக் கரும்பலகையில் எழுதுங்கள். வாசிக்க வாய்ப்பளியுங்கள். இறுதியாகப் பாடப்புத்தகத்திலுள்ள செயல் பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யட்டும்.

## முதல் எழுத்தை மாற்றினால்

நோக்கம் :

☸ இனம் கண்ட எழுத்துகளைப் பயன்படுத்திப் புதிய சொற்கள் உருவாக்குதல்

◆ பாடப்பகுதியிலுள்ள இச்செயல்பாட்டைக் குழந்தைகள் தாமாகச் செய்யத் தூண்டுங்கள்.

◆ அவற்றை மதிப்பிடுங்கள்.

கீழ்க்காணும் எழுத்தட்டைத் தொகுப்புகள் தயாரியுங்கள்.

| | எழுத்தட்டைகள் | உருவாகும் சொற்கள் |
|---|---|---|
| தொகுப்பு 1 | இ டி பி க த ம ஆ அ | அடி, ஆடி, இடி, பிடி, கடி, தடி, மடி |
| தொகுப்பு 2 | இ மி பி ச ன் ன ல் | இன்னல், மின்னல், பின்னல், சன்னல் |
| தொகுப்பு 3 | இ க த வ மா கா லை | இலை, கலை, தலை, வலை, மாலை, காலை |

- தேவையான தொடர் செயல்பாடுகள் திட்டமிட்டு நடத்த இம் மதிப்பீடு துணைபுரியுமல்லவா?

## கடைசி எழுத்தை மாற்றினால், பொருத்தமான இடத்தில் எழுதுங்கள்

நோக்கம் :

- இனம் கண்ட எழுத்துகளைப் பயன்படுத்தி புதிய சொற்கள் உருவாக்குதல்.

இச்செயல்பாடுகளை வீட்டுப்பாடமாகச் செய்துவரக் குழந்தைகளைத் தூண்டுங்கள். அவற்றை மதிப்பிட்டுத் தேவையான தொடர் செயல்பாடுகள் கொடுக்க வேண்டும்.

**மதிப்பீடு**

குழந்தைகள் எழுதியுள்ளதை குழந்தைகளே சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பளியுங்கள்

அதைத் தொடர்ந்து ஒருவருக்கொருவர் மாற்றி சக மதிப்பீடு நடத்தத் தூண்டுங்கள்.

## விடுகதைக்கு விடை எழுதுங்கள்

நோக்கம் :

- மொழி விளையாட்டுகளில் ஈடுபடுதல்
- எளிய விடுகதைகளுக்கு விடை சொல்லுதல்/ எழுதுதல்

- “நான் கேட்கும் விடுகதைக்கு விடை சொல்ல முடியுமா?” என்று சவால் விட்டு உங்கள் வகுப்புக் குழந்தை சுலபமாகக் கூறுவதற்கேற்ற எளிய விடுகதைகளைக் கேளுங்கள்.
- “இனிதான் உண்மையான போட்டி. நான் வாசிக்கும் விடுகதைகளுக்கு யார்..... யார்..... சரியான பதிலை எழுதுகிறீர்கள் பார்க்கலாம்” என்று சொல்லிப் பாடபகுதியிலுள்ள விடுகதைகளை வாசியுங்கள். குழந்தைகள் எழுதிய விடைகளை மதிப்பிடுங்கள்.

இவ்வலகில் மூன்று நிகழ்வுகள் உள்ளன. வினாக்களின் அடிப்படையில் உருவாகும் சார்ட்டுகளே உருவாகும் கதைப் புத்தகமாகும். (Evolving Text)

**சார்ட் 1**

ஆமையும் தவளையும் குளத்தில் வசித்தன.

குளம் வற்றிவிடுமோ எனப் பயந்தன.

அவை மழையை எதிர்பார்த்தன.

மேகம் திரண்டது, காற்று வீசியது, இடி இடித்தது, மின்னல் மின்னியது, மழை பெய்தது.

1. ஆமையும் தவளையும் எங்கு வசித்தன?
2. ஆமையும் தவளையும் ஏன் பயந்தன?
3. அவை எதை எதிர்பார்த்தன?
4. மழை எவ்வாறு வந்தது?

# நிகழ்வு - 2

# குளம் நிறைந்தது

### *வகுப்பில் மழை*

விளையாட்டுகளில் ஈடுபடுதல்

- வகுப்பில் மழை பெய்ய வைக்கலாமா? என்று கேட்டு வலது ஆள்காட்டி விரலால் இடது உள்ளங்கையில் தட்டச் சொல்லுங்கள்
- நான் கையை உயர்த்தும் போது வேகமாகத் தட்ட வேண்டும். கையைத் தாழ்த்தும்போது வேகத்தைக் குறைக்க வேண்டும் என்று சொல்லித் தட்டுவதை இயக்குங்கள்.
- உள்ளங்கையில் தட்டும் வேகத்தைக் கூட்டியும் குறைத்தும் மழைத்துளிகள் விழும் வேகத்தைக் கூட்டவோ குறைக்கவோ இயலும்.

### *கலந்துரையாடல்*

நோக்கம் :

☸ தம் சொந்த அனுபவத்தைக் கூறுதல்.

- மழைக்காலத்தில் உங்கள் வீட்டிற்குள் எவ்வாறு இருக்கும்?
- வீட்டிற்கு வெளியே எப்படி இருக்கும்?
- உங்கள் தெரு எப்படி இருக்கும்?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்

### *கதையோட்டம்*

நோக்கம்

☸ குழந்தைகளின் கவனத்தை ஒருங்கிணைக்க.

“மழை பெய்த போது ஆமையும் தவளையும் பாட்டுப்பாடி மகிழ்ந்தன அல்லவா! பின் என்ன நடந்தது தெரியுமா?” என்று கேட்டு நிகழ்வு இரண்டின் கதையோட்டத்தைச் சொல்லுங்கள். இவ்வாறு தொடர்மழை பெய்த போது,

- ஆமையும் தவளையும் என்ன செய்திருக்கும்?
- குளத்திற்கு ஏதாவது மாற்றம் வந்திருக்குமா?
- தொடர் மழையின் சுற்றுப்புறத்தில் என்னென்ன மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும்?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் கூறும் கருத்துகளைப் பசும்பலகை/ சார்ட்டில் எழுதி வட்டாரப் புத்தகம் உருவாக்க வேண்டும்.

- பொருத்தமான வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி அவற்றை வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

### *வட்டாரப் புத்தக வாசிப்பு*

நோக்கம் :

☸ சொற்களையும் எழுத்துகளையும் அடையாளம் காணல்.

- உருவாக்கிய வட்டாரப் புத்தகத்தைப் பல்வேறு உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்க வாய்ப்பளியுங்கள்.

- சொற்களையும் வாக்கியங்களையும் இனம் காண வாய்ப்பளியுங்கள்.

## பட வாசிப்பு

நோக்கம் :

- படத்தை உற்றுநோக்கிக் கருத்தை வெளியிடல்.

பக்கம் 47இல் உள்ள படத்தைக் குழந்தைகள் பார்க்கத் தூண்டுதல்

- வானில் காணும் காட்சி என்ன?
- ஆமை எங்கே நிற்கிறது?
- ஆமையின் கையில் இருப்பது என்ன?
- ஆமை தாமரைப் பூவை எதற்காகப் பறித்திருக்கும்?
- குளத்தில் எத்தனைத் தாமரைப் பூக்கள் உள்ளன?
- தவளை எங்கே இருக்கிறது?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

பாடப்பகுதியின் கருத்து மற்றும் அடையாளம் காண வேண்டிய சொற்கள் போன்றவற்றிற்கு உதவக்கூடிய வகையில் வினாக்கள் அமைத்துப் பட வாசிப்பைத் தூண்ட வேண்டும்.



## வட்டமிடலாம்

நோக்கம் :

- முன் பாடங்களில் கற்றதும் வட்டாரப் புத்தகத்தின் வாயிலாக அறிந்ததுமான சொற்களை அறிதல்.

- 'மழை' என்ற சொல் எத்தனை முறை வந்துள்ளது. வட்டமிட்டு எண்ணிப் பார்த்துக் கூற முடியுமா?
- பாடப்பகுதியில் வரும் உயிரினங்களின் பெயர்களை வட்டமிட முடியுமா?

போன்ற கேள்விகளைக் கேட்டுப் பாடப்பகுதியில் உள்ள சொற்களை இனம் கண்டு வட்டமிட வாய்ப்பளியுங்கள்.

## பாட வாசிப்பு

நோக்கம் :

- ஆசிரியர் வாசிக்கும் போது சொற்களை

அடையாளம் காணுதல்

- மாணவர்கள் முன் பாடங்களில் அறிந்த சொற்களும் எழுத்துகளும் பாடப்பகுதியில் காணப்படலாம்.

  அச்சொற்கள் மற்றும் எழுத்துகளின் ஒலியை / வரிவடிவத்தை வாசிக்கவும் அடையாளம் காணவும் உதவும் வகையில் ஆசிரியர் வாசிக்க வேண்டும்.
- சரியான உச்சரிப்போடு குரல் ஏற்றதாழ்வோடு வாசிக்க வேண்டும்.
- ஓரிரு முறை ஆசிரியர் வாசித்துக்காட்டியபின் சில மாணவர்களை வாசிக்கச் சொல்லாம்.



### கலந்துரையாடுங்கள்

நோக்கம் :

❁ கருத்து / அனுபவத்தை வெளியிடும் திறனை வளர்த்தல்.

கதைக்களம், வட்டாரப் பாடம், படவாசிப்பு, ஆசிரியரின் மாதிரி வாசிப்பு போன்றவற்றின் வாயிலாக ஓரளவிற்குப் பாடக் கருத்தைப் புரிந்திருப்பர்.

- தொடர்ந்து மழை பெய்து கொண்டிருந்தால் என்ன நிகழும்?
- மழையே பெய்யாவிட்டால் என்ன நிகழும்?
- தண்ணீர் இல்லாமல் நம்மால் உயிர்வாழ முடியுமா?

### விளையாட்டுகள் பலவிதம்

நோக்கம் :

❁ காகிதக் கப்பல் செய்தல்.

- ஆமையும், தவளையும் என்னென்ன விளையாட்டுகள் விளையாடி இருக்கும்?
- மழைகாலத்தில் என்னென்ன விளையாட்டுகள் விளையாடுகிறீர்கள்?

போன்ற கேள்விகளைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள். “கப்பல் விட்டு விளையாடுவோம்” என்று சொல்லியிருந்தால்,

“உங்களில் யார் யாருக்குக் கப்பல் செய்யத் தெரியும்? நாம் ஒரு கப்பல் செய்வோமா?” என்றுகூறி, எல்லாக் குழந்தைகளுக் கும் காகிதம் கொடுத்து நீங்கள் செய்வது போல் கப்பல் செய்ய அறிவுறுத்தி எல்லாக் குழந்தைகளும் கப்பல் செய்ய வாய்ப் பளியுங்கள்.

### எழுதுங்கள்

நோக்கம் :

- குறிப்பிட்ட சொற்களை அடையாளம் கண்டு எடுத்து எழுதுதல்.

பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள **மழை, குளம், தவளை** ஆகிய சொற்களைக் குழந்தைகள் தாமாகக் கண்டுபிடித்து எழுத வாய்ப்பளியுங்கள். சரியான சொற்களைக் கண்டுபிடிக்கப் பாடப்பகுதியை மீண்டும் மீண்டும் வாசித்துக் காட்டுங்கள்.

### புள்ளிகளை இணைப்போம்; நிறம் கொடுப்போம்

நோக்கம் :

- நுண் தசைப்பயிற்சி, வண்ணம் தீட்டும் பயிற்சி, படம் வரையும் பயிற்சி

புள்ளிகளை இணைக்கட்டும். விருப்பமான வண்ணம் தீட்ட உதவுங்கள். படங்கள் அழகுபெற வண்ணம் தீட்டும் போது கவனிக்க வேண்டியவை பற்றிக் கூறுங்கள்.



### உரையாடுங்கள்

நோக்கம் :

- படவாசிப்பு
- சுற்றுப்புறத்தை உற்று நோக்கும் திறன்
- கருத்தை வெளியிடும் திறன்

மழை பெய்து ஓய்ந்தபின் காணும் காட்சியே இங்கு படமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. படம் தொடர்பான கருத்துகள் வெளிவரும் வகையில் கீழ்க்காணும் வினாக்களைக் கேளுங்கள்.

- முதியவர் என்ன செய்து கொண்டிருக்கிறார்?
- குடையை ஏன் மடக்கி வைத்துள்ளார்?
- சாலை எவ்வாறு உள்ளது?
- காகம் என்ன செய்கிறது?
- ஆகாயம் எப்படிக் காட்சியளிக்கிறது?
- பறவைகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன?
- அவை எங்கே செல்கின்றன?
- பூங்காவில் குழந்தைகள் என்ன செய்து கொண்டிருக் கிறார்கள்?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

ஒவ்வொரு குழந்தைக்கும் தனது கருத்தைக் கூறவும் பிறர் கூறுவதைக் கேட்கவும் வாய்ப்பளியுங்கள்.

## எழுதுங்கள்

நோக்கம் :

- வாக்கியம் அமைக்கும் திறன்

**மான் ஓடியது**

**கொக்கு / பறவை பறந்தது**

**தவளை தாவியது**

“இச்செயல்பாட்டை யார் முதலில் செய்கிறார்கள் என்று பார்ப்போமா?” என்று சவால்விட்டு இச்செயல்பாட்டைப் போட்டியாக நடத்துங்கள்.

சக மதிப்பிடு செய்ய வாய்ப்பளியுங்கள்.

இறுதியில் ஆசிரியர் மதிப்பிட்டுத் தரத்தை நிர்ணயம் செய்யுங்கள்.

## சொல்லுங்கள்

நோக்கம் :

- படத்தைப் பார்த்து வாக்கியம் உருவாக்குதல்

படத்தைப் பார்த்து வாக்கியங்கள் உருவாக்கிக் கூற / எழுத வாய்ப்பளியுங்கள்.

**சார்ட் 2**

குளம் நிறைந்தது.

தாமரை மலர்ந்தது.

ஆமையும் தவளையும் விளையாடின.

நண்டும் அவர்களுடன் சேர்ந்து கொண்டது.

1. விடாது பெய்த மழையில் குளம் என்ன ஆனது?
2. குளத்தில் மலர்ந்த பூ எது?
3. தவளையும் ஆமையும் என்ன செய்தது?
4. அவர்களுடன் சேர்ந்து கொண்ட நண்பன் யார்?

## ஆயத்தச் செயல்பாடு

கீழ்வரும் பாடலை ஆயத்தச் செயல்பாடாக நடைமுறைப் படுத்துங்கள்.

“நான் ஒன்றென்று சொல்லும்போது ஒருமுறைத் தாவணும். இரண்டென்று சொல்லும்போது இரண்டுமுறைத் தாவணும்” என்று கூறி,

“மூன்றென்று சொன்னாலோ?”

"நான்கென்று சொன்னாலோ?"

என்று கேட்டு குழந்தைகள் புரிந்துகொண்ட பின், கீழ்வரும் பாடலை இசையோடு பாடுங்கள்.

இதுபோன்று கணிதப் பாடல்களைத் திரட்டி வகுப்பில் பயன்படுத்துங்கள்

முதலில் குழந்தைகள் பாட வேண்டும். நீங்கள் கூறும் எண்ணிக்கைகேற்ப தாவினால் போதும். பின்னர் பாடிக் கொண்டே தாவட்டும்.

ஒன்றென்று சொல்லும் போது
ஒருமுறை தாவணும்! ஒன்று
இரண்டென்று சொல்லும் போது
இரண்டு முறை தாவணும்! ஒன்று... இரண்டு
மூன்றென்று சொல்லும் போது
மூன்று முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று
நான்கென்று சொல்லும் போது
நான்கு முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு
ஐந்தென்று சொல்லும் போது
ஐந்து முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து
ஆறென்று சொல்லும் போது
ஆறு முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து... ஆறு
ஏழென்று சொல்லும் போது
ஏழு முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து... ஆறு... ஏழு
எட்டென்று சொல்லும் போது
எட்டு முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து... ஆறு... ஏழு... எட்டு
ஒன்பதென்று சொல்லும் போது
ஒன்பது முறை தாவணும்! ஒன்று... இரண்டு... மூன்று... நான்கு... ஐந்து... ஆறு... ஏழு.... ஒன்பது

## நிகழ்வு - 3
## கலைவாணனின் கனவு - (கணிதம்)

*6 இன் அறிமுகம்.*

6 எண்ணிக்கையுள்ள குழுக்களுக்கு ஆறு என்று பெயர் சூட்டுவதே இச்செயல்பாடு.

விருந்தினர்களுக்கு உணவு பறிமாறவேண்டும். எத்தனை விருந்தினர் என்பது முன்கூட்டித் தெரியாது. அவர்களுக்குத் தேவையான பொருட்களைக் குழந்தைகள் சேகரிக்க வேண்டும். (பாய், பாத்திரங்கள், தம்ளர்...)

என்னென்ன சேகரிக்க வேண்டும்?

- இருப்பதற்கு வேண்டிய சிறிய பாய் (காகிதம்)
- தேவையான தட்டுகள் (மதிய உணவிற்காக குழந்தைகள் கொண்டு வந்துள்ள தட்டுகள்)
- தம்ளர்கள் (காகித தம்ளர்), ◆ கரண்டிகள் (கம்பு)
- பழங்கள் (படம்), ◆ பிஸ்கட்டுகள் (காகிதம்)

ஒரு குழு குழந்தைகள் (6 பேர்) விருந்தினராக வருகின்றனர். நண்பர்கள் அவரை வரவேற்கின்றனர்.

இருக்கை ஒழுங்கு செய்யும் குழு எண்ணிக்கைக் கேற்ப பாய் கொண்டு வருதல். ஒவ்வொருவரும் அமருதல்.

அவ்வாறாக பாத்திரம், தம்ளர், பழம், பிஸ்கட் போன்றவை விருந்தினருக்கு ஒவ்வொன்றாக எடுத்து வைத்தல். விருந்தினர்களுக்கு ஏற்ற எண்ணிக்கையுள்ள பொருட்களை எடுக்கின்றார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டும். உணவு உண்டபின் ஒவ்வொரு பொருட்களையும் குழுக்களாக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிற்கும் என்ன பெயர் கூறலாம் என்பதை ஆராயவேண்டும்.

6 என்ற எண்ணிக்கையுள்ள குழுவிற்கு 6 என்று கூறலாம்.

6 எண்ணிக்கையுள்ள பல்வேறு பொருட்களை குழந்தைகள் எடுத்து வர வாய்ப்பளியுங்கள்.

**பாடி மகிழ**

மழையே மழையே வா மழையே!
மின்னல் மின்னிட வா மழையே!
மழையே மழையே வா மழையே!
இடியும் இடித்திட வா மழையே!
மழையே மழையே வா மழையே!
மரமும் நனைந்திட வா மழையே!
மழையே மழையே வா மழையே!
மண்ணை நனைத்திட வா மழையே!
மழையே மழையே வா மழையே!
குளத்தை நிறைத்திட வா மழையே!
மழையே மழையே வா மழையே!
மக்கள் வாழ்ந்திட வா மழையே!

### 7 அறிமுகம்

நோக்கம் :

- ☸ ஏழு எண்ணிக்கையுள்ள பொருட்களுக்கு 7 என்று பெயர் சூட்டுதல்.

- மேடையிலிருக்கும் ஏழு பேருக்கு ஏழு பூங்கொத்துகள் நல்க வேண்டும். நெகிழி பாத்திரத்தை (பிளாஸ்டிக் கப்) பூங்கொத்தாகப் பாவிக்கலாம்.
- சிவப்பு, மஞ்சள், நீலம் ஆகிய மூன்று குழுக்களாக் குங்கள்.
- அதே நிறமுள்ள வண்ணத் தாள்களை அக்குழுக் களுக்கு கொடுங்கள். தங்களுக்குக் கிடைத்த வண்ணக் காகிதங்களைப் பயன்படுத்திப் பூக்கள் உருவாக்கட்டும்.
- மேடையில் ஏழு குழந்தைகள் இருக்கட்டும். அவர் களுக்கு முன்னால் ஏழு பூங்கொத்துகளை வைக்க வேண்டும். கூடுதலாகவோ குறைவாகவோ வைக் காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேடையில் ஆறு

பூங்கொத்துகளா உள்ளன? என்று கேட்டு ஆறை விட அதிகமாக உள்ள இக்குழுவை 7 (ஏழு) என்று கூறி 7ஐ அறிமுகப்படுத்த வேண்டும். 4, 5, 6, 7 என்று முன்னர் தயாரித்த தொகுப்பிலிருந்து 7 ன் தொகுப்பு ருவாக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

- பல்வேறு பொருட்கள் பயன்படுத்தி (5, 6, 7) ஆகியவற்றின் தொகுப்புகள் உருவாக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

அதனடிப்படையில்,

- கூடுதல் பொருட்களுள்ள தொகுப்புகள் எவை?
- குறைவான பொருட்களுள்ள தொகுப்புகள் எவை?

என்று கேட்டுக் கலந்துரையாட வேண்டும்.

*8 அறிமுகம்*

படத்திலுள்ளது போல் 8 கட்டங்களுள்ள கட்டத்தைத் தரையில் வரையுங்கள்.



ஒவ்வொன்று வீதம் எல்லாக் கட்டங்களிலும் மிட்டாய்கள் வைக்க வேண்டும். அதற்குத் தேவையான மிட்டாய்களைக் குழந்தைகள் சேகரிக்கட்டும். (கல்தான் மிட்டாய்)

- சரியாக 8 சேகரிக்கிறார்களா?
- ஒவ்வொன்றிலும் ஒவ்வொன்று வீதம் வைக்கிறார்களா?

**இப்பாடலைச் செய்கைப் பாடலாகப் பாடி நடிக்க**

- ஒன்பது குழந்தைகள் வரிசையாக அமர்ந்து இருக்கட்டும்.
- அவரது கைகளை மொட்டுகள் போல தலைக்கு மேலாகக் குவித்து வைக்கட்டும்.
- ஒரு குழந்தை குடத் தில் தண்ணீர் கொண்டு வந்து முதல் குழந்தையின் தலையில் ஊற்றுவது போல நடிக்கட்டும்.
- அமர்ந்துள்ள குழந்தை தனது கைகளை மலர் களைப்போல மலரச் செய்யட்டும்.
- இவ்வாறு தொடர்ந்து ஒன்பது குழந்தைக்கும் ஊற்றட்டும்.
- ஆசிரியரும் மற்ற குழந்தைகளும் வட்டத்தில் நின்று பாடலை இராகத்தோடு பாடட்டும்.

- அதிகமாகச் சேகரித்துள்ளார்களா?
- குறைவாகக் கொண்டுவந்ததை ஈடுகட்ட மீண்டும் சேகரிக்கிறார்களா?




தொடர்ந்து,

1 முதல் 8 வரையுள்ள தொகுப்புகளிலுள்ள பொருட்களைப் பிரித்தெடுத்து 8 ன் தொகுப்புகள் உருவாக்க வாய்ப்பளிக்க வேண்டும்.

*9 அறிமுகம்*

நோக்கம் :

- ஒன்பது பொருட்களடங்கிய தொகுப்பிற்கு 9 (ஒன்பது) என்று பெயர் சூட்டுதல்.

வண்ணப் பென்சில் பெட்டி எல்லாக் குழந்தைகளிடம் இருக்குமல்லவா.



ஒன்பது கட்டங்கள் வரைவதற்கேற்ப ஒரு தாளை ஒன்பது கட்டங்கள் கிடைக்கும் வண்ணம் மடக்கிக் கொடுக்க வேண்டும்.

தங்களுக்கு கிடைத்த தாளிலுள்ள ஒன்பது கட்டங்களில் ஒன்பது வண்ணப்பென்சில்களை குழந்தைகள் வைக்கட்டும்.

ஒவ்வொரு குழந்தையும் வைத்த பென்சில்களைச் சேகரித்த ஒரு இரப்பர் நாடாவில் சுற்றி அவரவர் தாளில் வையுங்கள்.

இத் தொகுப்பிற்கு என்ன பெயர் வைக்கலாம்? என்று கேட்டு, இத்தொகுப்பு 9 என்று அறிமுகம் செய்யுங்கள்.

- இதுவரை உருவாக்கிய 2 முதல் 8 வரை தொகுப்பு களின் பெயர்களை நினைவுபடுத்திக் கூற வாய்ப் பளியுங்கள்.
- 9 புத்தகங்கள் அடங்கிய தொகுப்புகளாக்க வாய்ப்பளி யுங்கள்.
- 8 பொருட்கள் அடங்கிய தொகுப்பை ஒன்பதாக்குவது எப்படி?
- எந்தத் தொகுப்பளித்தாலும் அதன் அடுத்த எண்ணிக் கையுள்ள தொகுப்பாக மாற்றுவதெப்படி?




கலந்துரையாடுங்கள். கீழ்க்காணும் செயல்பாடுகளையும் செய்யலாம்.

- அடுத்தடுத்துள்ள இரு எண்களுக்கிடையேயுள்ள எத்தனை தொடர்புகளை கூறமுடியும்?
- உங்கள் வீட்டிலுள்ளவர்கள் உணவு உண்ண எத்தனை தட்டுகள் வேண்டும்?

- உங்கள் வீட்டிலுள்ள ஒவ்வொருவருக்கும் குடை உண்டா? எத்தனை குடைகள் உள்ளன?
- எதில் அதிகளவு சக்கரங்கள் உள்ளன? காரிலா? ஆட்டோவிலா?
- உங்கள் வீட்டில் கோழி வளர்க்கிறீர்களா? எத்தனை கோழிகள்? அவற்றிற்கு எத்தனை குஞ்சுகள் உள்ளன?
- ஸ்டாம்பிட் பயன்படுத்தி குறிப்பிட்ட எண்ணிக் கூற வாய்ப்பளியுங்கள்.



*மணியோசை*

ஒரு குழந்தையை மணியடிக்கச் சொல்லுங்கள்.

எத்தனை முறை அடிக்கிறாள் என்று மற்ற குழந்தைகள் எண்ணிச் சொல்ல வாய்ப்பளியுங்கள்.

*விளையாடலாம்*

ஆளுக்கொரு எண் வீதம் 9 குழந்தைகளுக்கும் எண்ணட்டை கொடுங்கள் ( 1- 9) எண் வரிசைப்படி வரிசையாக நிற்கட்டும். இதனடிப்படையில்,

- யாருக்கு 9 கிடைத்தது?
- யாருக்கு 7 கிடைத்தது.
- 8-றக்கு முன்னால் நிற்பது யார்?
- 3-றக்கும் 4-றக்கும் இடையில் நிற்பது யார்?

போன்ற வினாக்களைக் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

## கதையோட்டம்

நிகழ்வு மூன்றிற்கான கதையோட்டத்தைக் கூறுங்கள்.



''ஓ! இது என்றும் குளக்கரைக்கு விளையாட வரும் கலைவாணன் ஆயிற்றே! அயர்ந்து உறங்கிவிட்டான் போல் தெரிகிறது!'' தவளை சொன்னது.

- கலைவாணன் உறங்கக் காரணம் என்னவாக இருக்கும்?
- நீங்கள் உறங்கும் போது கனவு கண்டதுண்டா?
- எப்படிப்பட்ட கனவு?

ஒவ்வொருவருக்கும் அவரவர் கண்ட கனவுகளைச் சொல்ல வாய்ப்பளியுங்கள்.

சிறப்பாகச் சொன்ன மாணவனைப் பாரட்ட மறக்க வேண்டாம்.

''கலைவாணன் உண்மையில் என்ன கனவு கண்டான் தெரியுமா?'' என்று கேட்டுப் பாடப்பகுதிக்குள் நுழையுங்கள்.

**உங்கள் வகுப்பில் அவசியம் இருக்க வேண்டியவை**

- கணிதச் செயல்பாடுகள் செய்ய போதுமான அளவு கற்கள் / விதைகள்,
- படத் தொகுப்புகள் (பாடக் கருத்தோடு தொடர்பு படுத்தி நாம் பத்திரிக்கை களிலிருந்தும் செய்தித் தாள்களிலிருந்தும் வெட் டியெடுத்து வைத்தவை)
- எண்ணட்டைகள், எழுத் தட்டைகள் (லேமினேட் செய்து வைப்பது நல் லது)
- குழந்தைகள் எழுதிய/ வரைந்த படைப்புகளை வெளியிட வகுப்பு அறி விப்புப் பலகை
- சார்ட்டுகள், படங்கள் போன்றவற்றைத் தொங்க விட வசதியாக கயிறு
- படங்கள் நிறைந்ததும் எழுத்துப் பகுதிகள் குறை வானதுமான புத்தகங்கள்.
- சிறுவர் பத்திரிகைகள் (சுட்டி விகடன், கோகுல், செய்தித்தாள்களுடன் வரும் சிறுவர் இதழ்கள்
- ஸ்டாம்ப் இட்,
- பசை, வண்ணப்பென்சில் கள், கத்தரிக்கோல்

போன்ற பொருட்களை கல்வி யாண்டின் ஆரம்பத்திலேயே வகுப்பில் இருக்கும்படி பார்த் துக் கொள்வது நல்லது. அதற் காகப் புத்தகத்தையும் ஆசிரியர் பனுவலையும் முன்னரே வாசித்துப் பொருள்களின் பட்டி யலைத் தயார் செய்து கொள் ளுங்கள்.

## *கலைவாணனின் கனவு*

### *படம் பார்த்து எண்ணுதல்*

நோக்கம் :

- 6, 7, 8, 9 ஆகிய எண்ணல் எண்களை எண்ணிக் கூறுதல்.

- முதல் படத்தில் கலைவாணனின் கனவில் வந்த நண்பர்கள் எத்தனை பேர்?
- இரண்டாவது படத்தில் கலைவாணனின் கனவில் வந்த நண்பர்கள் எத்தனை பேர்?
- மூன்றாவது படத்தில் கலைவாணனின் கனவில் வந்த நண்பர்கள் எத்தனை பேர்?
- நான்காவது படத்தில் கலைவாணனின் கனவில் வந்த நண்பர்கள் எத்தனை பேர்?

போன்ற கேள்விகள் கேட்டுப் படங்களை எண்ணிப் பார்க்க வாய்ப்பு கொடுங்கள்.

மேலும் படங்களில் உள்ள பட்டங்கள், இலைகள் ஆண்குழந்தைகள், பெண்குழந்தைகள், கட்டம் போட்ட சட்டை போட்டவர்கள் எனப் பலவற்றையும் எண்ணிக் கூற வாய்ப்பளியுங்கள்.

### *சொல்லுங்க! சொல்லுங்க!! எத்தனை வேண்டும்?*

நோக்கம் :

- குறிப்பிட்ட எண்ணிக்கையை எண்ணி எடுத்தல்.

வகுப்பில் இரண்டு வட்டம் வரையுங்கள். உள்வட்டம் சிறியதாகவும் வெளிவட்டம் பெரியதாகவும் இருக்கட்டும். உள் வட்டத்தில் நிறைய குன்றிமுத்து / மஞ்சாடி விதை / புளிய விதைகளை இட்டு வையுங்கள். வெளிவட்டத்தில் குழந்தைகள் வட்டமாக நிற்கட்டும்,

“சொல்லுங்க! சொல்லுங்க!! எத்தனை வேண்டும்?” என்று கேளுங்கள்.

“நீங்க சொல்லுங்க எத்தனை வேண்டும்?” என்று சொல்லிக் கொண்டே குழந்தைகள் ஓட்டும்.

“**ஆறு** என்று சொல்லுங்கள்!” குழந்தைகள் ஓடுவதை நிறுத்திவிட்டுச் சிறிய வட்டத்திலுள்ள ஆறு முத்துகளை எண்ணி எடுக்கட்டும்; உங்களிடம் காட்டட்டும்.

- அனைவரும் காட்டிய பின், மீண்டும் விளையாட்டு தொடரட்டும்.
- ஏழு, எட்டு, ஒன்பது என்று எண்களை மாற்றி மாற்றிக் கூறுங்கள்.
- எண்ண இயலாத குழந்தைகளுக்கு உதவுங்கள்.



## பாடி மகிழ்வோம்

நோக்கம் :

- ஒன்று முதல் ஒன்பது வரை எண்களின் வரிவடிவம் அறிதல்.

- நீங்கள் என்னென்ன விளையாட்டுகள் விளையாடு வீர்கள்?
- யாருடன் விளையாடுவீர்கள்?
- விளையாடும் போது பாட்டுப் பாடுவது உண்டா?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

ஒரு சிலருக்கு விளையாட்டுகளைப் பற்றிச் சொல்ல வாய்ப்பளியுங்கள்.

## நெல்லிக்காய் கொடுக்கலாம்

நோக்கம் :

- 6 முதல் ஒன்பது வரை எண்ணையும் அவற் றின் எழுத்து வடிவத்தையும் பொருத்துதல்.

- முதல் படத்தில் எத்தனை பேர் உள்ளனர்?
- எத்தனை நெல்லிக்காய்கள் உள்ளன? எண்ணிப் பாருங்கள்.

என்று சொல்லிப் படங்களையும் நெல்லிக்காய்களையும் எண்ணுவதற்குத் தூண்டுங்கள்.



அவ்வாறு ஒவ்வொரு படத்தைப் பற்றியும், வினாக்கள் கேட்டு ஒவ்வொரு படத்திலும் உள்ள குழந்தைகளையும் நெல்லிக்காய்களையும் எண்ணிப் பார்க்கத் தூண்டுங்கள்.

## சொல்லுங்க! சொல்லுங்க!! எத்தனை வேண்டும்?

நோக்கம் :

- ஒன்று முதல் ஒன்பது வரை எழுத்துருக்களை இனம் காணுதல்.

- சார்ட் பேப்பரை வெட்டி ஒன்று முதல் ஒன்பது எண்களை எழுத்தால் எழுதிக் கொள்ளுங்கள்.
- எண் அட்டைகள் குழந்தைகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு இருக்கட்டும். ஒவ்வொருவருக்கும் ஒன்று வீதம் கிடைக்க வேண்டும்.
- பெரிய வகுப்பாக இருந்தால், இரண்டு மூன்று குழுக்களாகப் பிரித்து விளையாடச் செய்யலாம்.
- முன் வகுப்புகளில் செய்த "சொல்லுங்க! சொல்லுங்க!!" செயல்பாட்டை நடத்துங்கள்.
- குறிப்பிட்ட எண்ணைச் சொல்லும் போது குழந்தைகள் எழுத்தால் எழுதிய அட்டையை முதலில் கண்டு பிடிக்கட்டும். பின் அதற்குத் தகுந்த எண்ணை எண்ணி எடுக்கட்டும்.

### மதிப்பீட்டுக் குறிப்புகள்

**A.** கருத்து உட்கொண்டு சொற்களை வாசிக்கிறான்.

**B.** சில சொற்களை வாசிக்க இயலவில்லை. மேலும் தெளிவு தேவைப்படுகிறது.

**C.** வாசிக்க இயலவில்லை. சில எழுத்துகளை மட்டும் அடையாளம் காண்கிறான்.

இம்மதிப்பீட்டுக்குறிப்புகளின் அடிப்படையில் மதிப்பிட்டு, மேலும் எழுத்துகளை அவன் இனம் காண்பதற்குத் தேவையான உடனடி உதவிகளைச் செய்யுங்கள்.

குறிப்பிட்ட சொற்கள், எழுத்துகள் தொடர்ந்து வரக்கூடிய விதத்தில சில வாக்கிய அட்டைகள், சொல் அட்டைகளை உருவாக்கி, பின்தங்கிய மாணவர்களுக்காகப் பயன்படுத்துங்கள்.

தகுந்த நேரத்தில் உடனடி உதவிகள் செய்யும்போது மட்டுமே பின்தங்கிய மாணவர்களை முன்னுக்குக் கொண்டு வர இயலும் அல்லவா!

## கனவு கலைந்தது

- கலைவாணனின் கனவு கலையக் காரணம் என்ன?
- நீங்கள் எப்போதாவது கனவு கண்டு பயந்தது உண்டா? போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.
- கலைவாணனைச் சுற்றிலும் எத்தனை நெல்லிக்காய் விழுந்து கிடக்கின்றன?
- அவனது தலைமீதுள்ள நெல்லிக்காயையும் சேர்த்து மொத்தம் எத்தனை?

போன்ற கேள்விகள் கேட்டுப் படத்தை உற்று நோக்கத் தூண்டுங்கள்.

## வரிவடிவம் எழுதலாம்

நோக்கம் :

- எண்ணுரு எழுதுதல்

- 6, 7, 8, 9 ஆகிய எண்களைக் கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எழுதும் செயல்பாட்டை வகுப்பறையில் நடத்துங்கள்.
- எண்களை எழுதும் முறையை (எங்கு தொடங்கி எங்கு முடிக்க வேண்டும்) எல்லாக் குழந்தைகளும் காணும் வண்ணம் பசும்பலகையில் பெரியதாக எழுதுங்கள்.
- நீங்கள் எழுதிய எண்ணுரு மேல் எழுத குழந்தைகளுக்கு வாய்ப்பளியுங்கள்.
- பின்னர் அவரவர் புத்தகத்தில் குழந்தைகள் தாமாக எண்ணுருக்களை எழுதட்டும்.

## எண்ணுவோம் எழுதுவோம்

நோக்கம் :

- படங்களை எண்ணி எண்களைக் கண்டுபிடித்து எழுதுவோம்.

- இச்செயல்பாட்டை ஒரு போட்டியாக நடத்துங்கள்.
- "யார் முதலில் எல்லாப் பெட்டிகளிலும் எழுதுகிறீர்கள்?" என்று சவால்விட்டு குழந்தைகள் இச்செயல்பாட்டைச் செய்யத் தூண்டுங்கள்.
- குழந்தைகள் தமக்குள் சகமதிப்பீடு நடத்த வாய்ப்பளியுங்கள்.

## ஒளிந்திருப்பது யார்?

நோக்கம் :

- விடுப்பட்ட எண்களைக் கண்டுபிடித்து எழுதுதல்

- எத்தனை பூக்கள் உள்ளன?
- பூக்களில் எழுதியிருக்கும் எண்கள் எவை?
- எத்தனை பூக்கள் மறைந்துள்ளன?
- அவற்றில் உள்ள எண்கள் எவை?

போன்ற கேள்விகள் கேட்டு விடுபட்ட எண்களைக் கண்டுபிடித்து எழுத வாய்ப்பளியுங்கள்.

## ஒளிந்திருப்பது யார்?

நோக்கம் :

- படம் வரையும் பயிற்சி
- தசைப்பயிற்சி
- எண்களை வரிசையாக இணைத்தல்

- ஒன்று முதன் ஒன்பது வரையுள்ள எண்களை வரிசையாக இணைக்கட்டும்.
- உருவாகும் மீன் வடிவத்திற்கு வண்ணம் தீட்டி மகிழட்டும்.

## எண்ணி எழுதுவோம்

நோக்கம் :

- படத்தை உற்றுநோக்குதல், எண்களை எண்ணி எழுதுதல்.

### பாடி மகிழ

**மழை வருது**

மழை வருது
மழை வருது
நெல்லுக் குத்துங்க
முக்காப்படி அரிசி போட்டு
முறுக்கு சுடுங்க
தேடிவரும் மாப்பிள்ளைக்கு
எடுத்து வையுங்க
சும்மா வரும் மாப்பிள்ளைக்கு
சூடு வையுங்க

இச்செயல்பாட்டை வீட்டுச் செயல்பாடாகக் குழந்தைகள் செய்ய வாய்ப்பளியுங்கள். அவர்கள் எழுதி வந்ததை மதிப்பிட்டுத் தர நிர்ணயம் செய்யுங்கள்.

## நிகழ்வு - 4

# தண்ணீரும் தவளையும்

### கதையோட்டம்

நிகழ்வு நான்கிற்கான கதையோட்டத்தைக் கூறுங்கள்.

- பாக்கு மட்டையை வைத்து அவை என்ன செய்தி ருக்கும்?
- படகு தண்ணீரில் மிதந்திருக்குமா?
- யார் படகை ஓட்டியிருப்பார்?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடுங்கள்.

குழந்தைகள் கூறும் கருத்துகளைப் பசும்பலகை / சார்ட்டில் எழுதிச் சொற்களையும் எழுத்துகளையும் அடையாளம் காண உதவுங்கள்.

வாசிப்பு உத்திகளைப் பயன்படுத்தி வாசிக்கச் செய்யுங்கள்.

**வாசிக்க முடியுமா?**

வழவழ கொழகொழ வாழைப்பழம்
ஏழுமலை வீட்டில் பழுத்த பழம்
ஏழு பழம் எனக்கு ஏழு பழம் உனக்கு
வழவழ கொழகொழ வாழைப்பழம்

### தண்ணீரும் தவளையும்

நோக்கம் :

- ☸ படக்கதைகளை உற்றுநோக்கிக் கதையைக் கூறுவது.

ஒவ்வொரு படத்தையும் மையப்படுத்தி வினாக்கள் கேட்க வேண்டும்.

- படத்தில் யாரெல்லாம் உள்ளனர்?
- அவர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?
- படகில் துடுப்புப் போடுவது யார்?
- ஆமை எங்கே அமர்ந்திருக்கிறது?
- கொக்கு என்ன செய்கிறது?

போன்ற கேள்விகள் கேட்டு கலந்துரையாடலாம்.

பின் இதை ஒரு கதை வடிவில் கூறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

கதை தடைப்படும்போது கேள்விகள் கேட்டும் சில விளக்கங் கள் கொடுத்தும் கதையைத் தொடர வாய்ப்பளிக்கலாம்.

## *உரையாடுங்கள்..... எழுதுங்கள்*

நோக்கம் :

- கதையை முழுமையாக்க, கலந்துரையாட ஆர்வத்தைத் தூண்டல்.

- படகு என்ன ஆயிருக்கும்?
- படகில் இருந்தவர்கள் தப்பித்திருப்பார்களா?
- படகு கவிந்து போகக் காரணம் என்ன?
- குளத்திற்குத் திரும்ப என்ன திட்டம் தீட்டியிருப்பார்கள்?

போன்ற கேள்விகள் கேட்டுக் கலந்துரையாடல்.

அனைத்துக் குழந்தைகளும் கலந்துரையாடலில் பங்கெடுத்த பின், இப்படக் கதையைக் குழந்தைகளுக்கு ஆர்வம் உண்டாகும் வகையில், குரல் ஏற்ற இறக்கத்தோடு கூறுங்கள்.

> ஒரு குளத்தில் ஆமையும் தவளையும் நண்டும் வசித்து வந்துச்சாம்! ஒரு நாள் அவை குளக்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது கற்றடிச்சுதாம்! பாக்கு மரத்துல இருந்து ஒரு மட்டை கீழ விழுந்துச்சாம்! ஆஹா! அழகான மட்டையா இருக்குதே! குளத்துல படகு செய்து விளையாடலாமா! என்று ஆமை கேட்டதாம்.

என்ற முறையில் முழுக் கதையையும் விரிவுபடுத்திக் கூறுவீர்கள் அல்லவா!

## *நானே வாசிப்பேன்*

நோக்கம் :

- முன்பாடங்களில் கற்ற எழுத்துகள் அடங்கிய வாக்கியங்களைச் சுயமாக வாசித்தல்.

முன்பாடங்களில் கற்ற எழுத்துகள், இப்பாடத்தில் அறிமுகம் செய்த எழுத்துகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வாக்கியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

மாணவர்கள் சுயமாக வாசித்தால், அவன் மேற்கண்ட எழுத்துகளை அடையாளம் கண்டுள்ளான் என உறுதிப்படுத்தலாம்.

எனவே ஆசிரியை மாணவர்களை மதிப்பிட இப்பகுதியைப் பயன்படுத்தலாம்.

**இடம் மாறிப் போச்சு!**

'எனக்கு இன்று என்னமோ சரியில்லை. நான் எழுதுவதெல்லாம் இடமாறிப் போகிறது'' என்று நடித்து குழந்தைகளுக்கு நன்கு தெரிந்த ஒரு சொல்லின் எழுத்துக்களை இடமாற்றி எழுதுங்கள்.

''இது என்னவென்று கூற முடியுமா?'' என்று கேளுங்கள். குழந்தைகள் கண்டு பிடித்து விட்டால்,

''இது சுலபமானது. அதனால் கண்டுபிடித்துவிட்டீர்கள். இனி நான் எழுதுவதைக் கண்டு பிடிக்க முடியுமா?'' என்று சவால் விட்டு,

''யார் யார் சரியாகக் கண்டு பிடிக்கிறார்கள் என்று எனக்குத் தெரியணும். எனவே எல்லோரும் நான் கரும் பலகையில் எழுதும் சொற்களை சரியாக்கி அவரவர் ஏட்டில் எழுதுங்கள்'' என்று சொல்லி கரும்பலகையில் எழுதுங்கள். குழந்தைகள் இடம் மாறியுள்ள எழுத்துக்களை சரியாக அடுக்கி சரியான சொற்களை எழுதட்டும்.

## கதை நேரம்

நோக்கம் ;

- கதை கேட்கவும் சொல்லவும் திறன் பெறுதல்.

குரல் ஏற்ற இறக்கத்தோடும், முகபாவ மாற்றத்தோடும் உணர்வு பூர்வமாகவும் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள கதையை வாசித்துக் காட்ட வேண்டும்.

இறுதியில் கதையை முழுமையாகக் கூற குழந்தைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

கதை கூறும் திறனை வளர்க்க இது உதவும்.

## நான் கற்ற சொற்கள்

நோக்கம் :

- மாணவன் தான் இனம் கண்ட / கற்ற சொற்களை எழுதுதல்.

| | | | |
|---|---|---|---|
| அ | ஆ | இ | ஈ |
| அம்மா | ஆமை | இலை | ஈரம் |
| அடி | ஆடு | இடி | ஈட்டி |
| அம்மி | ஆடி | இசை | ஈயம் |

1. படகாக எதைப் பயன்படுத்தி ஆமையும் நண்பர்களும் விளையாடினர்?
2. ஆபத்து என்று சொன்னது யார்?
3. படகு என்ன ஆனது?

**சார்ட் 3**

பாக்குமட்டையை படகாக பயன்படுத்தின.

ஆபத்து என்று கொக்கு சொன்னது.

படகு கவிழ்ந்தது.

| இதுவரைக் கற்ற உயிர் எழுத்துகள் | இதுவரைக் கற்றமெய் எழுத்துகள் | இதுவரைக் கற்ற ஒலித் துணைக் குறியீடுகள் | இதுவரைக் கற்ற உயிர் மெய் எழுத்துகள் |
|---|---|---|---|
| அ | ம், ப், க், த் | ◌ா | ம,ப, க, த, ட, ல, வ |
| ஆ | ட், ல், வ் | ◌ி | மா, பா, கா, தா, டா, லா, வா |
| இ | ண், ள், ர், ச் | ◌ீ | மீ, பீ, கீ, தீ, டீ, லீ, வீ |
| ஈ | | ை◌ | மை, பை, கை, தை, டை, லை, வை |
| உ | | ெ◌ | மெ, பெ, கெ, தெ, டெ, லெ வெ |
| | | | ன, ள, ர, ச |
| | | | னா, ளா, ரா, சா |
| | | | னி, ளி, ரி, சி |
| | | | னீ, ளீ, ரீ, சீ |
| | | | னை, ளை, ரை, சை |
| | | | னெ, ளெ, ரெ, செ |

# பயிற்சித்தாள்

## 1. படவாசிப்பு

ஏதேனும் மழைக் காட்சிகள் அடங்கிய ஒரு படத்தைக் காட்டுங்கள். குழந்தைகள் படத்தை உற்றுக் கவனித்து காட்சிகளை சிறு வாக்கியங்களாகக் கூறட்டும்.

## 2. உரையாடல்.

மழைக்கு முன், மழை பெய்யும் போது மழைக்குப்பின் தங்களது மழை அனுபவத்தைக் கூறட்டும்.

## 3. வாசித்தல்

பழம் பழம் மாம்பழம்

பழம் பழம் பலாப்பழம்

வெட்டி வெட்டி தா தா

அம்மா அம்மா தா தா.

## 4. எழுதுதல்.

‘ ஈ ’ என்ற எழுத்தில் தொடங்கும் மூன்று சொற்களை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| | | |

## 5. மாதிரி போன்று எழுதுங்கள்.

வடி – வாடி – வெடி

மட்டி – ––––––, –––––––

பட்டை – ––––––, –––––––

கட்டி – ––––––, –––––––

## 6. ‘ லை ’ என்ற எழுத்தில் முடியும் மூன்று சொற்களை எழுதுங்கள்.

| | | |
|---|---|---|
| | | |

7. விடுபட்ட எண்களை எழுது.

1 3 ___ ___ 9

8. சரியானவற்றிற்கு ✓ அடையாளமும் தவறானவற்றிற்கு ✗ அடையாளமும் இடுக.



6



3



9

9. பெரிய எண்ணை வட்டமிடுங்கள்.

9 5 7

1 3 4

10. படம் வரைந்து வண்ணம் தீட்டுங்கள்.

